# 26. விதியின் ரதங்களில் பயணம்.

வருடம் 2007

நான்கு வருடங்கள்! காலம் சில போழ்து வேகமாகவும், சிலசமயம் வேகமாவும், சில சமயம் ஊர்ந்தும், சில சமயம் மிக வேகமாகவும்.. நகர்ந்து செல்லும் போலும்.

ஆரம்பத்தில் புதிய குழந்தைக்கு பேர் வைப்பதில் ஒரு போட்டியே நிகழ்ந்தது. சம்பத் தன் தந்தையின் பெயரான சண்பகராமன் பெயரை வைக்க வேண்டும் என கூறினார். கிருஷ்ணகாந்திற்கோ செல்வக்குமார் என பெயரிட வேண்டுமென ஆசை. சத்தீஸூக்கும் அர்ச்சனாவிற்கும் ரித்தீஸ் என்று பெயரிட வேண்டுமென்று ஆசை. கடைசியல் ரித்தீஸ்குமார் என்று பெயர் இடப்பட்டது..இது நடந்து நான்கு வருடங்கள் ஓடிவிட்டது. ரித்தி என அர்ச்சனா கூப்பிட ஆரம்பித்தாள். சத்தீஸூம் அப்படியே கூப்பிட்டுக் கொண்டிருந்தான். கிருஷ்ணகாந்த்தும் சௌதாமணியும் குமார் என்றே கூப்பிட்டார்கள்.

பின் அர்ச்சனா மூன்று மாதத்தில் அலுவலகம் செல்ல ஆரம்பித்து விட்டாள். குழந்தையின் வேலைகளை சௌதாமணியே பார்த்துக் கொண்டாள். உரிய நேரத்தில் அவனுக்கு உணவு ஊட்டுவது , விளையாட்டு காட்டுவது, மற்ற பராமரிப்பு வேலைகள் அனைத்தும் சௌதாமணியுடையதுதான்.

பலா சமயங்களில் கிருஷ்ணகாந்த் சமையல் வேலைகளையும் சேர்த்து கவனித்துக் கொண்டான். பேரனோடு கொஞ்சி விளையாடுவதில் அவனுக்கு அப்படி ஒரு சந்தோசம்.

மேலும் ஒரு மாதம் ஓடி விட்டது. இது குமாருக்கு 4வதுமாதம். வழக்கம்போல அர்ச்சனா சௌதாமணியிடம் பணம் கொடுத்தாள். எண்ணிப் பார்த்தாள், 50,000 இருந்தது. “இது என்ன 5000 அதிகமாக இருக்கிறது?” என்றாள் சௌதாமணி…“இருக்கட்டும் அத்தே-குழந்தை இருக்கிறான் - இல்லையா?” என்றாள் அர்ச்சனா.

சௌதாமணிக்கு கோபம் வந்துவிட்டது.” நான் என்ன உன் குழந்தைக்கு ஆயாவா? எங்களிடம் பணம் இல்லையா? குழந்தையின் செலவுகளை நாங்க பார்த்துக்கமாட்டேமா? - ஏன் சத்தீஸூம் பிரிச்சு பரிச்சு ஒரே வீட்டிலேயே கணக்கு பார்க்கிறீங்க.. உங்க பணமே வேண்டாம். நாங்களே குடும்ப செலவு அத்தனையும் பார்த்துக்கிறோம் என்று பணக்கவரை அப்படியே தள்ளி வைத்தாள் சௌதாமணி.

அதெல்லாம் எனக்கு தெரியாது அத்தை . சத்தீஸ் கொடுக்கச் சொன்னார், கொடுத்தேன். மத்ததை நீங்க அவர்கிட்டே கேட்டுக்கங்க.. என்றாள். அவள் முகத்தில் வழக்கமான புன்னகை இல்லை. முகம் சிறுத்து விட்டது. பணத்தை அவள் எடுத்துக் கொள்ளவில்லை. அவள் அறைக்குச் சென்று தாழிட்டு கொண்டு விட்டாள்.

கிருஷ்ணகாந்த் ‘‘சரி-சரி- எடுத்துவை! இதை பெரிசு பண்ணாதே!’’ என்றான். சௌதாமணி என்னவோ போங்க , சத்தீஸ் ஏன் இப்படி பன்றானே தெரியலை?!’’ என்றாள்.

அதற்கு பிறகு பணவிஷயத்தை சௌதாமணியோ, கிருஷ்ணகாந்தோ, அர்ச்சனாவோ, சத்தீஸோ பேசுவதில்லை என்று முடிவு செய்து விட்டார்கள். மாதம் ஆனால் அர்ச்சனா பணத்தை சௌதாமணியிடம் கொடுப்பாள். சௌதாமணி அதை எண்ணிக்கூட பார்க்க மாட்டாள். அப்படியே கிருஷ்ணகாந்திடம் கொடுத்து விடுவாள். கிருஷ்ணகாந்த் ஒரு மௌனப் புன்னகையோடு வாங்கி வைத்துக் கொள்வாள். குறிப்பிட்ட தொகை அதில் இருக்கும். கூடுதல் குறைவில்லாமல்.

இடையில் குழந்தைக்கோ, கிருஷ்ணகாந்திற்கோ, சௌதாமணிக்கோ உடல் நலம் சரியில்லையென்றால்- சத்தீஸ் என்ன வேலை இருந்தாலும் அவனே காரில் மருத்துவரிடம் அழைத்துச் செல்வான. கிருஷ்ணகாந்தை கொஞ்சம் கூட செலவு செய்யவிட மாட்டான்.’’ இருக்கட்டும்பா.. இருக்கட்டும்பா அத்தனைதான் வார்த்தைகள் மருத்துவ செலவுகள் அவனுடையது. –அது சொல்லாமல எழுதப்பட்ட விதி.

கிருஷ்ணகாந்த், சௌதாமணி இருவரும் சொந்த பந்தங்களின் திருமணம், நல்லது –கெட்டது, கோவில்கள் என வெளியூருக்குப் போனால் அது கிருஷ்ணகாந்த்தின் செலவு. எத்தனை செலவானது? எந்தெந்த ஊருக்கு போனீர்கள்- யார் யாரைப் பார்த்தீர்கள் என எந்தக் கேள்வியும் சத்தீஸிடமிருந்து வராது.

கிருஷ்ணகாந்த்தோ, சௌதாமணியோ ஏதாவது சொன்னால், சத்தீஸ் ‘‘சரி சரி’’ என்று கேட்டுக் கொள்வான். அர்ச்சனா மட்டும் சௌதாமணியிடம் உட்கார்ந்து உறவு முறைகள் பற்றி விசாரித்துக் கொள்வாள். அத்தோடு சரி. வேறு பேச்சில்லை. வீட்டிற்கு விருந்தினர்கள் வந்தால் சத்தீஸ் முகம் சுளிக்க மாட்டான். கலகலப்பாக பேசுவான். அவர்களை முடிந்தால் வெளியூர்களுக்கு அழைத்துச் செல்வான். ஹோட்டல்களுக்கு அழைத்துச் செல்வான். ஆனால் அந்த கலகலப்பு அவர்கள் ஊருக்கு புறப்படும் வரைதான் அவர்கள் வாசல்படி

தாண்டினால் மறந்து விடுவான்.. பின் அவன் இயந்திரம். அவன் வேலை.. வேலை.. வேலை.. இதுவே வாழ்க்கை.

அர்ச்சனாவிற்கோ எல்லாம் கோடு கிழித்த மாதிரி நடக்க வேண்டும். எதிலும் ஒரு கண்டிப்பு.. சொன்னது சொன்ன மாதிரிதான்... இரண்டாம் பேச்சுக்கு இடம் இல்லை. இயந்திரம் போல் வாழ்க்கை ஆனது.

மேலும் மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. இப்போது ரித்தீஸ்குமார் ஒரு Private பள்ளிக்கூடத்தில் படிக்க ஆரம்பித்துவிட்டான். அவனை பள்ளிக்கூடம் கொண்டு போய் விடுவது, அழைத்து வருவது எல்லாம் கிருஷ்ணகாந்தின் வேலை. செலவுகள் கூடகூட பணம் சேர்த்தே சத்தீஸ் கொடுத்தான். கேட்காமலே பீஸ்கட்டுவது எல்லாமே கிருஷ்ணகாந்தின் வேலைதான்.

வாசலில் இரண்டு கார்கள் நின்றன. மூன்று டூவீலர்கள் நின்றன. ஒரு டிரைவர், இரண்டு வேலைக்காரர்கள், எல்லாம்தான் ஆனால் எல்லாம் ஒரு கோடு கிழித்த மாதிரி , ஒரு இயந்திர கதியில்.

சௌதாமணிக்கு அலுப்பு தட்டிவிட்டது. .. ஒரு நாள் அர்ச்சனா அறைக்குள் சென்றாள். அர்ச்சனா டி.வி பார்த்துக் கொண்டிருந்தாள். இரவு 9.30 மணி. இன்னும் சத்தீஸ் வரவிவல்லை. சௌதாமணி பேச ஆரம்பித்தாள். .. இது என்ன அர்ச்சனா- இப்படி? இப்படி கோடு கிழிச்ச மாதிரி இருக்கீங்க உங்க நல்லது கெட்டது எங்ககிட்டே சொல்லக்கூடாத? எங்களோட கலகலப்பா எல்லாத்தையும் பேசக்கூடாதா? சரி போனது போகட்டும் , இனிமே இந்த வீட்டு பொறுப்பையும் நீயே பார்த்துக்க.. எங்களுக்கு வேண்டாம்.. மாசம் ஆனா நாங்க பணம் தர்றோம். எல்லா பொறுப்பையும் நீங்க ஏத்துக்கங்க. எங்களுக்கு இனிமே என்ன வேணும்.. என்றாள்.

வீட்டு பொறுப்பு எல்லாம் வேண்டாம் அத்தே! எனக்கு ஏற்கனவே மண்டை வலி , குடைச்சல் தாங்க முடியலே எத்தனை டென்ஷன்-என்றாள் அர்ச்சனா..

அப்படி கஷ்டப்பட்டு ஏன் வேலைக்கு போறே! எதுக்கு மேலே மேலே சம்பாதிக்கனும். இருக்கிறது பத்தாதா? அவன் மட்டும் வேலைக்கு போகட்டும். அது போதும் என்றாள்.

அர்ச்சனாவின் முகம் மாறிவிட்டது. “அத்தே நான் பத்து பேருக்கு கவுன்சிலிங் கொடுக்கிறேன். நீங்க எனக்கு கவுன்சிலிங் கொடுக்கிறீங்களா? என்றாள்.

சௌதாமணி அப்படியே ஆடிப் போய்விட்டாள். ஒன்றுமே பேசவில்லை. எழுந்தும் வந்துவிடவில்லை. சத்தமிட்டு பேசவில்லை. அமைதியாக

இருந்தாள். முகம் இறுக்கமாக மாறியது. அடுத்தநாள் இரவு வரை சௌதாமணி அமைதிகாத்தாள். யாருடனும் அதுவும் பேசவில்லை. இரவு சத்தீஸ்வந்து ஆசுவாசிப்படுத்திக் கொண்ட உடன் சத்தீஸிடம் சென்று அர்ச்சனாவை பற்றி புகார் செய்ய ஆரம்பித்தாள். " என்னை ஏன் அர்ச்சனா இப்படி பேசுகிறாள்?.. என்றாள். சத்தீஸ் கோபப் படவில்லை."அர்ச்சனா – எல்லாம் என்னடம் சொன்னாள்; நீ தப்பா புரிஞ்சுக்காதே- நீ ஏன் ஒரு வேலைக்கு போகலைன்னுதான் அவள் கேட்கிறாள். உன் திறமை எல்லாத்தையும் நீ அழிச்சுட்டேங்கறா.. பொண்ணுன்னா வீட்டோட house wife த்தான் இருக்கனுமா'' இதுதான் அவ கேட்ட கேள்வி.. சரி.. விடு அன்னைக்கு உன் சூழ்நிலை என்னவோ -இப்போ அதை பேசறதுல்லே அர்த்தம் இல்லேன்னு சொல்லிட்டேன்.. இந்த பிரச்னையை இதோடு விட்டுடு.. என்றான்.

சௌதாமணி ஒன்றுமே பேசவில்லை. சத்தீஸே தொடர்ந்தான்- " அம்மா நமக்கு பணத்திற்கு குறைச்சல் இல்லே; உன்னாலே முடியலேன்னா, சமையல் வேலைக்கு ஒருத்தரைப் போட்டுக்கோ – அதிலே என்ன ஆயிடப் போகுது? என்றான்

சௌதாமணி இதற்கும் ஒன்றும் பேசவில்லை. சத்தீஸே தொடர்ந்தான். உன்னையோ அப்பாவையோ கஷ்டப்படுத்தறதுங்கறது என் எண்ணம் இல்லை. நல்லா ரிலாக்ஸ்டா ரெஸ்ட் எடுங்க... அது போதும் என்றான்.சௌதாமணி பதில் எதுவும் பேசவில்லை. தன் அறைக்கு திரும்பினாள். –கிருஷ்ணகாந்திடம் ஒன்று விடாமல் கூறினாள்.

கிருஷ்ணகாந்த் ஒன்றுமே பேசவில்லை. கன்னத்தில் கைகளை ஊன்றியவாறு சூனியத்தை வெறுத்து நோக்கியவாறு அமர்ந்து இருந்தான்.

X X X

## 27 .என்ன தவறு செய்தேன்?

வருடம் 2009

மேலும் இரண்டு வருடங்கள் ஓடியது அல்லது நகர்ந்தது. வீட்டில் ஒரு இறுக்கமான சூழ்நிலை இருந்தது. மனம் விட்டு பேசுதல் என்பது அபூர்வமாகி கொண்டு வந்தது. சல சமயங்களில் வார்த்தைகளுக்கு வார்த்தை புது புது அர்த்தங்கள் கண்டுபிடிக்கப் பட்டன.. ஆனால் கத்திப் பேசுவதோ – சண்டையிடுதலோ கிடையாது.

அர்ச்சனா சில சமயம் முகத்தை இறுக்கமாக வைத்துக் கொண்டாலும், புன்னகை மாறாது பார்த்துக் கொண்டாள். முகத்தில் புன்னகை தவழ்ந்து கொண்டே இருந்தது. சத்தீஸ் மேலும் ஒரு பதவி உயர்வு பெற்றிருந்தான். .. அவனுக்கு வேலைப் பளு மேலும் கூடியிருந்தது. அர்ச்சனா பாதியில் விட்டிருந்த C.A படிப்பையும் முடித்திருந்தாள். இப்போது Principal counciling, Business counciling உடன் , சில கம்பெனிகளுக்கு தணிக்கை செய்து தரும் பணியும் மேற்கொண்டிருந்தாள். அலுவலகத்தில் மேலும் இருவர் C.A படித்தவர்களை இணைத்துக் கொண்டிருந்தார்கள். அலுவலகம் விரிவுகடுத்தப்பட்டிருந்தது. 5, 6 பேர் பணியில் இருந்தார்கள். அவளும் சில சமயம் ஞாயிற்றுக்கிழமைகளில் பணிக்கு செல்ல துவங்கியிருந்தாள்.

ரித்தீஸ்குமாருக்கு 6 வயது துவங்கிவிட்டது. முதல் வகுப்பு படிக்க ஆரம்பித்து விட்டான். அவனை காரில் சிலநாள் கிருஷ்ணகுமார் பள்ளிக்கு கொண்டு போய் விட்டான். சில சமயம் சௌதாமணி அந்த பணியை செய்தாள். அவன் தாத்தா –பாட்டியோடு ஒட்டுதலோடு இருந்தான்.

சௌதாமணிக்கு இப்போது சமையல் வேலையும் இல்லை.சமையல் வேலைக்கு சமையல்காரியை போட்டாகிவிட்டது. ரித்தீஸ்குமாரின் தேவைகளை கவனிப்பது தவிர கிருஷ்ணகாந்துக்கும், சௌதாமணிக்கும் வேறு வேலை எதுவுமில்லை.

வீட்டுப் பொருளாதரத்தை பொறுத்தவரை கிருஷ்ணகாந்தே இன்னும் பொறுப்புக்களை கவனித்துக் கொண்டே வந்தான். மாதம் முடிந்தால் அர்ச்சனா சௌதாமணியிடம் பணத்தை கொடுத்து விடுவாள். பின்பு பணத்தை பற்றிய பேச்சே கிடையாது.

கிருஷ்ணகாந்திற்கு வீட்டின் நிதிக்கணக்குகளை எழுதி, அதை சௌதாமணியிடம் பேசி, பேசி, சலித்துப் போனது. இவன் என்ன கூறினாலும் பணக்கணக்குகளைப் பற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

கிருஷ்ணகாந்த் தன் மன இறுக்கங்களைப் பற்றி - இயந்திர கதியிலான வாழ்க்கையை பற்றி – தன் நண்பரான மோகன் ராவிடம் மனம் விட்டு பேசினான். மாலையில் நண்பர்களை சந்திக்கும் பழக்கத்தை அவன் விடவேயில்லை.

இவன் என்ன சொன்னாலும் மோகன்ராவ்- “Free யாக இருங்கள் . உங்கள் மகனுக்கும், மருமகளுக்கும் சம்பாதிக்கிற வயசு – சம்பாதிக்கிறாங்க” ஒரு நாள் அவங்களும் சலிச்சு போய், நம்ம மாதிரி ரெஸ்ட் எடுத்துப்பாங்க .. எல்லாம் வயசுதான் காரணம். என்றார். பின் ஒருநாள் - “வீட்டிலே தனிமை பிடிக்கலேன்னா –புத்தகம் படிங்க..” என்றான்.

கிருஷ்ணகாந்த் அவா் சொன்னபடி ஒன்றிரண்டு நாவல்கள் ஆன்மீக நூல்கள் படிக்கலானாா். ஆங்கில தினசரியை நீண்ட நேரம் படிப்பது பழக்கம் ஆனது.

சௌதாமணிக்கு – வீட்டு வேலைக்காரா்களை வேலை வாங்குவது. – ஒரு வேலையாக போனது. காலையில் 6 மணிக்கு சமையல்காரி வந்து விடுவாள். காலை டிபன் தயாரித்து விட்டு போய்விடுவாள். பின் 10 மணிக்கு வருவாள் - மதிய உணவு தயாரித்து வைத்து விட்டு போய்விடுவாள். மதியம் 1.30 மணிக்கு அா்ச்சனாவுக்கும், சத்தீஸுக்கும் என கேரியா்கள் வரும். அதில் உணவு எடுத்துப் போட்டு அனுப்புவது சௌதாமணியின் வேலை. பின் வாரம் இருமுறை தோட்டக்காரனோடு பேசுவது, தினசரி இரண்டு நேரம் வருகின்ற முனியம்மாவோடு பேசுவது, இதுதான் அவளோட வேலை. அக்கம் பக்கத்தினருடன் சோ்ந்து கொண்டு கோவில் குளம் என்று போய்விடுவாள்.

இரவு உணவு தயாரிப்பது அவள் வேலைதான். இரவு உணவு சாப்பிட்டு முடிப்பதற்கு 10, 10.30 மணி ஆகிவிடும். ஏதாவது ஒரு நாள் அா்ச்சனா , இரவு உணவு தயாரிக்கும் போது சௌதாமணிக்கு உதவுவாள்... அல்லது அவளே தயாரிப்பாள். பரிமாறுவாள். ஆனால் அதிகம் பேசமாட்டாள்.

நாட்கள் சுழன்று கொண்டிருந்தன.

அந்த அறையில் பெரிய அறைகள் மூன்று இருந்தன. அதெல்லாமல் ஒரு சிறிய அறை ஒன்று இருந்தது. பின்புறம் விசாலமான இடம். –அதில் காய்கறி தோட்டம்.. பெரியது ஒன்று, சிறியது ஒன்று என்று இரண்டு ஹால்கள், - வாசலில் காா்கள் நிற்கும் போா்டிகோ இடைஞ்சலாகத்தான் இருந்தது.. இதில் இரண்டு காா்கள் , மூன்று டுவீலா்கள் நின்றன.

கிருஷ்ணகாந்திற்கு மாடியில் வீடு எடுத்துவிடலாம் என்ற எண்ணம் இருந்தது. வசதியாக ஒரு ஹால், இரண்டு அறைகள், ஒரு சமையற்கட்டு என்று போா்ஷன் கட்டிவிடலாம் என அவனுக்கு தோன்றியது.

சௌதாமணியிடம் கோட்டான். “சரி- செய்து விடுங்கள்” என கூறிவிட்டாள். சுத்தீஸையும் அா்ச்சனாவையும் கேட்டுவிட வேண்டும் என்று தோன்றியது.

ஒரு இஞ்சினியரைப் பாா்த்து blue print, Estimation எல்லாம் தயாா் செய்தான். அவன் தந்தை வழி சேமிப்பு, அதன் வட்டி, தாய்வழி சேமிப்பு - இதுவே மேலே கட்டிடம் கட்ட போதுமானதாக இருந்தது. சௌதாமணியின் பணம் தனியாக இருந்தது. அவன் ஆயுட்கால சேமிப்பு, சத்தீஸ் கொடுக்கிற பணத்தில் மிச்சம், எல்லாம் தனிதனியே இருந்தன. ஒவ்வொரு வகை வரவுக்கும், செலவுக்கும் கணக்கு இருந்தது.

ஒரு ஞாயிற்றுக்கிழமை சத்தீஸ், அர்ச்சனா இரண்டு பேரும் வீட்டில் இருந்தார்கள். அவர்களை ஹாலுக்கு அழைத்தான் கிருஷ்ணகாந்த். மேலே வீடு எடுக்கலாம்னு இருக்கேன் என்று தன் திட்டத்தை விவரித்தான் கிருஷ்ணகாந்த்.

“சரி – செய்யுங்கள்!” என்றான்., சத்தீஸ். அர்ச்சனா, சௌதாமணி எதுவும் பேசவில்லை. கிருஷ்ணகாந்த் தொடர்ந்தான்.. “ பார் சத்தீஸ் - பணம் எல்லாம் கூட அரேன்ஞ் பண்ணிடலாம். Sufficientஆ இருக்கு. ஆனா என் ஒருத்தானாலே இனி நின்னு வேலை செய்ய முடியாது. பார்த்துக்க முடியாது. நீயும் லீவு போட்டுட்டு பார்த்துக்கனும்.

“லீவு எல்லாம் போட முடியாத சூழ்நிலை அப்பா என்னை புரிஞ்சுக்கோங்க-“ என்றான். கிருஷ்ணகாந்த் -“சரி- வீவு போடாதே அப்பப்ப என்னென்ன நடக்குதுன்னு கொஞ்சம் பாத்துக்கோ” அதெ செய்யலாம் இல்லையா? என்றான். அதற்க சத்தீஸ் என்னை அதிகம் எதிர்பார்க்காதீங்க என்றான் . பிறகு அமைதி.

அதற்கு கிருஷ்ணகாந்த் இந்த Plan உனக்கு பிடிக்கலேன்னா சொல்லு வேற Plan மாத்திக்கலாம், உன் மனசிலே என்ன இருக்கு- அதை வெளிப்படையாகவே சொல்லு!” என்றான்.

சத்தீஸ் கொஞ்சம் மௌனம் சாதித்தான். “அப்பா Plan எல்லாம் உங்க இஷ்டம்.. இது உங்க வீடு .. உங்க இஷ்டம் போல கட்டுங்க. இதிலே நான் சொல்றதுக்கு ஒன்னுமே இல்லை -!” என்றான். அவன் குரலில் ஏதோ ஒரு விரக்தி தொனித்தது.

தூக்கி வாரிப் போட்டது கிருஷ்ணகாந்திற்கு “ அப்போ இது உன் வீடு இல்லியா? அர்ச்சனா வீடு இல்லியா? நான் போகும் போது தலையிலே தூக்கிட்டு போகப்போறேனா?” என்றார் காட்டமாக. சத்தீஸ் எழுந்து நின்று விட்டான். கிருஷ்ணகாந்த் blue print, Estimation எல்லாவற்றையும் தூக்கி எறிந்தார்.“கட்டிடம் கட்டவும் வேண்டாம் ஒரு மண்ணும் வேண்டாம்; எல்லாம் எப்படியோ போங்க-” என்று கத்திவிட்டு – எழுந்து வீட்டை விட்டு வெளியே போய்விட்டார்.

கிருஷ்ணகாந்த் அப்படி அமைதி இழந்து பேசியதை இதுவரை வாழ்க்கையில் சௌதாமணி பார்த்ததில்லை.

இரண்டு மணி நேரம் வீட்டில் யாருக்கும் அமைதியில்லை. கிருஷ்ணகாந்த் வெளியே போனவன் திருபம்பவில்லை. அவா் கைபேசிக்கு தொடா்பு கொண்டால் switct off என்று பதில் வந்தது.

இரண்டு மணி நேரம் கழித்து- அவராக வந்தாா். – யாரிடமும் பேசவில்லை. படுக்கையில் சென்று படுத்துவிட்டாா்.

- சௌதாமணி ஏனோ அழுது கொண்டிருந்தாள்.

# 28. முள்ளில் படுக்கையிட்டு

வருடம் 2010

மேலும் ஒரு வருடம் முள்ளாக குத்தியது. காலம் கூட ஒரு வகை முள்தானோ. மனதில் துன்பம் இருந்தால் குத்திக் கொண்டே இருக்குமோ.

மாடியில் வீடு எடுக்கும் திட்டம் கைவிடப்பட்டது. மீண்டும் பழைய இயந்திர வாழ்க்கை.

சௌதாமணி மெல்ல மெல்ல அர்ச்சனாவிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தாள். "இவன் ஏன் ஒட்டுதல் இல்லாமல் இருக்கான், நீ சொல்லக் கூடாதா? இருக்கிறது நாலு பேரு. ஒருத்தருக்கொருத்தர் முகத்தை தூக்கி வைத்துட்டு இருக்கிறது நல்லாவா இருக்கு.!" என்று அர்ச்சனாவை அடிக்கடி நேரிடையாகவே கேட்டாள். அர்ச்சனா நான் என்ன சொல்றது அத்தை, சத்தீஸ் கிட்டேயே பேசுங்க! உங்க மகன்தானே. ! எல்லோருடைய சந்தோசமும்தான் வாழ்க்கையில் முக்கியம்…" என்றாள்

சௌதாமணி சத்தீஸிடம் வெட்டு ஒன்னு துண்டு ரெண்டு என்று பேசி விடுவது என்று முடிவு செய்தாள். கிருஷ்ணகாந்திடம் "இது என்னங்க நரக வாழ்க்கை ஒட்டுதல் இல்லாம? என்பாள்.

கிருஷ்ணகாந்த் நீ அவனையே கேள் - நீ என்கிட்டே ஒண்ணும் பேசாதே – என்று எரிச்சல் கொள்ள ஆரம்பித்து விட்டான்.

கொஞ்சம் உடல்நிலை சரியில்லையென்று இரண்டு நாட்கள் அலுவலகத்திற்கு விடுப்பு எடுத்துக் கொண்டிருந்தான் சத்தீஸ். முதல் நாள் அர்ச்சனாவும் அவனுக்கு துணையாக வீட்டிலேயே இருந்தாள். அடுத்த நாள் பணிக்கு போய்விட்டாள்.

இரண்டாம் நாள் பிற்பகல் 4.00 மணி இருக்கும். சத்தீஸ் அமைதியாக ஹாலில் அமர்ந்து கொண்டிருந்தான். சௌதாமணி அவன் அருகில் சென்று அமர்ந்து கொண்டாள். பேச்சை ஆரம்பித்தாள். "உன் கிட்டே கொஞ்சம் பேசணும்" என்றாள் "ம்.. சொல்லு என்றான் சத்தீஸ்.

" நீ ஏன் இப்படி எங்க கூட ஒட்டுதல் இல்லாமல் இருக்கே" என்றாள். "அப்படி எல்லாம் ஒன்றும் இல்லையேம்மா? நீங்களாச்சும் எதையாவது கற்பனை பண்ணிக்கறீங்க"– என்றான்

அப்போ" அப்பா அன்னிக்கு மாடியிலே வீடு எடுக்கறதைப் பத்தி பேசினப்ப- நீ என்ன பேசினே-உங்க வீடு – உங்க இஷ்டம் போல

செஞ்சுக்கோங்கன்னு சொன்னே இல்லையா? அப்போ நீ யாரு மாஞ்சு மாஞ்சு – அப்பாவும் நானும் குருவி சேர்க்கற மாதிரி பணம் சேக்கனும் பாரு! எஙகளுக்கென் எதுவுமே வேண்டாம். நாங்க ரெண்டுபேரும் எங்காச்சும் போயிடறோம்.. ஒரு முதியோர் இல்லம், காசி, இராமேஸ்வரம் போயிடறோம் நீங்க நல்லா இருங்க.

அவள் கண்களில் தாரை தாரையாக நீர். கிருஷ்ணகாந்தும் வீட்டில் இல்லை. சத்தீஸ்"அழாதே-" என்றான். "நான் தனியா ஒரு வீடு வாங்கலாம்னு பார்த்துட்டு இருக்கேன். .. நல்லா அமைஞ்சா வாங்கிடுவேன். ...என்று சொன்னான்.

"அதுக்க பணம் ?" என்றாள், சௌதாமணி, "அது நான் சேர்த்து வெச்சிருக்கேன். அர்ச்சனா கிட்டேயும் இருக்கு" நாங்க அரேஞ்ச் பண்ணிப்போம்-" என்றான். சௌதாமணிக்கு உலகத்தின் இன்னொரு பக்கம் புரிய ஆரம்பித்தது. நிலவின் மறு பக்கம் தெரிய ஆரம்பித்தது.

அழுவதை நிறுத்தி கொண்டு "நல்லா இருடா" என்று சொல்லிவிட்டு போய்விட்டாள். மாலையில் கிருஷ்ணகாந்த் வந்த உடன் தான் பேசியது அவன் பேசியது அனைத்தையும் கூறினாள்.

கிருஷ்ணகாந்த் அனைத்தையும் அமைதியாக கேட்டுக் கொண்டார்.

ஒரு மாதம் ஓடியது. அவரே நகரில் வேறு பகுதியில் - ஒரு Flat பார்த்து சத்தீஸ் -அர்ச்சனாவை குடித்தனம் வைத்துவிட்டர்.

அர்ச்சனாவும் - சத்தீஸும் அதிகம் மறுப்பு சொல்லவில்லை.

## 29. பாலூட்டி வளர்த்த கிளி

வருடம் -2010

அர்ச்சனாவும் - சத்தீஸும் தனிக்குடித்தனம் சென்றுவிட்டார்கள். இது பழைய செய்தியாகிவிட்டது. ரித்தீஸ்குமார் இல்லாததுதான் - அவனை பிரிந்து இருப்பதுதான் கிருஷ்ணகாந்திற்கும் சௌதாமணிக்கும் மிகுந்த மனவேதனை தருவதாக இருந்தது.

சௌதாமணி சமையற்காரியை நிறுத்திவிட்டு, அவளே சமைக்க ஆரம்பித்து விட்டாள். உணவும் மிகவும் சுருங்கிவிட்டது. வகை வகையான உணவுகள், ருசி மிகுந்த உணவுகள் எல்லாம் தவிர்க்கப்பட்டன...

உணவு சாப்பிடுவதும் ஒரு கடமை போல் ஆனது. சில வேளைகளில் சௌதாமணி சாப்பிடாமலே விடலானாள். ஆக்கி வைத்த சோறும்.குழம்பும் வீணாகிப் போகும் பலநாள்.

கிருஷ்ணகாந்திற்கு –டி.வி புத்தகங்கள் இரண்டும்தான் கதி. டி.வி யில் கிரிக்கெட் மாட்ச் எங்காவது நடப்பதை காட்டுகிற சேனல்கள் வந்து விட்டன. நடப்பு (Live) மாட்ச்சுகள் இல்லாவிட்டாலும் பழைய மாட்ச்சுகள் Replay செய்யப்பட்டன. கிருஷ்ணகாந்த் திருப்பத் திருப்பப் பார்த்த மாட்ச்சுகளையே பார்த்துக் கொண்டிருப்பான் ஒரு சிறுவனைப் போல.

அவன் வீட்டிற்கு நண்பர்கள் சிலர் வர ஆரம்பித்து இருந்தார்கள். பகல் நேரங்களிலே நண்பர்களின் அரட்டை கச்சேரி வீட்டிலேயே நடக்கும். அவ்வாறு அடிக்கடி வீட்டிற்கு வருவது மோகன்ராவ் ஆகத்தான் இருக்கும்.

அவரிடம் குடும்ப விஷயங்களை கெஞ்சம் மனம் விட்டு பேசுவான் கிருஷ்ணகாந்த். ஒரு நாள் மோகன்ராவ் வீட்டிற்கு வந்த போது கிருஷ்ணகாந்த் -"என் மகன்- மருமக-பேரப்பிள்ளை- என்னை மறத்துட்டு போயிட்டாங்க. ஆனா எனக்கு எனக்கு அவங்களை மறக்க முடியலே, என்றான்.

மோகன்ராவ் இலேசாக சிரித்தார். "இப்ப உன்னும் கெட்டு போயிடலே – "ஞாயிற்றக்கிழமை -ஞாயிற்றக்கிழமை நீங் அவுங்க வீட்டிற்கு போயிடுங்க" ரெண்டு வாரம் நீங்க போனீங்கன்னா, அடுத்த வாரம் அவுங் உங்க வீட்டுக்கு வந்துடுவாங்க.." என்றார்.

அவ்வாறே ஞாயிற்றக்கிழமைக் கிழமைகளில் காலை 9.00 மணிக்கெல்லாம் கிருஷ்ணகாந்தும், சௌதாமணியும் சத்தீஸின் வீட்டிற்கு போக ஆரம்பித்தர்கள். நன்றாகத்தான் வரவேற்றார்கள் சத்தீஸும், அர்ச்சனாவும்.

அர்ச்சனா இப்போதெல்லாம ஞாயிற்றக்கிழமைக் கிழமைகளில் அலுவலகம் செல்வதை விட்டுவிட்டாள். கிருஷ்ணகாந்தும், சௌதாமணியும் வந்தால் அவளே விதவிதமாக சமைத்து புதிய உணவு வகைகள பரிமாற ஆரம்பித்தாள். அவள் முகத்தில் ஒரு குதூகலம், எப்போதும் புன்னகை மலர்ந்திருக்கும். முகத்தில் தெளிவு.

சத்தீஸும் தந்தையுடனும், தாயுடனும் அமர்ந்து நீண்ட நேரம் பேசினான். கலகலப்பாக சிரித்தான்.

எவ்வாறோ அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தால் போதும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள் கிருஷ்ணகாந்தும், சௌதாமணியும்

என்றாலும் இவர்கள்தான் அவர்களை தேடிப் போக வேண்டும். அவர்கள் வருவது ரொம்ப அபூர்வமாக இருந்தது. பல சமயங்களில் வருகிறேன் என்று சொல்வார்கள் . ஆனால் வரமாட்டார்கள். தொலைபேசியில் அந்த வேலை - இந்தவேலை-வந்துவிட்டது என தகவல்கள் வரும்.

பல எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றமாக போய்க் கொண்டிருந்தன.

# 30. பறவைக்கு இறக்கை முளைத்துவிட்டது.

வருடம் -2011

சத்தீஸும், அர்ச்சனாவும் சேர்ந்து 3 பெட்ரூம் கொண்ட ஒரு ப்ளாட் ஒன்று வாங்கிவிட்டார்கள்… அவர்கள் முயற்சியிலேயே.. கிருஷ்ணகாந்திடம் ஒரு பைசா கேட்காமலே..

இதிலே கிருஷ்ணகாந்துக்கும், சௌதாமணிக்கும் எந்த வருத்தமும் இல்லை. மகிழ்ச்சி இருந்தது. ப்ளாட் வாங்கி கிரகபிரவேசத்திற்கு நாள் குறிக்கும் வரை – எந்த தகவல் பரிமாற்றமும் இல்லை. இந்த இடத்தில் வீடு பார்த்திருக்கிறேன் - அந்த இடத்தில் பார்த்திருக்கிறேன் - இந்த விலை வந்து பாருங்கள் - என எந்த தகவலும் இல்லை. எல்லா செய்திகளும் மற்றவர்கள் மூலமாகத்தான் கிருஷ்ணகாந்திக் காதில் வந்து வழுந்தது.

ஒருநாள் முன்னிரவு பத்திரிகையுடன் சத்தீஸும், அர்ச்சனாவும் வந்து கிரகபிரவேச அழைப்பிதழ் கொடுத்தார்கள். அதுதான் சத்தீஸ் தந்தைக்கு நேரிடையாக கொடுத்த தகவல்.

கிருஷ்ணகாந்த், சௌதாமணி இருவரும் இடிந்து போய்விட்டார்கள். சௌதாமணி அதிகமாக ஒன்றும் பேசவில்லை. "இருந்த சாப்பிட்டுவிட்டு போங்க" என்று மட்டும் சொன்னாள்.

"நேரமில்லை. பல பேரை பார்க்க வேண்டும்" என்று கூறிவிட்டு சத்தீஸ் புறப்பட்டு விட்டான்.

அடுத்த நாள் மோகன்ராவ் வந்த போது மகன் செய்த செயலை சொல்லி சௌதாமணி அழுதாள். கண்ணீர் சிந்தினாள்.

கிரகபிரவேசத்திற்கு போகாமல் விட்டுவிடலாம் எனப் பார்க்கிறேன் என்றான் கிருஷ்ணகாந்த். மோகன்ராவ் "சின்னப் பள்ளை –அவன் தப்பு செய்யலாம்- நாம் செய்யலாமா? கூடாது –அவசியம் போய்விட்டு வாருங்கள்!" என்றார்.

கிரகபிரவேசம் இடமின்மை காரணமாக எளிமையாகத்தான் நடந்தது. .. அதிகம் பேர் அழைக்கப்படவில்லை.

கிருஷ்ணகாந்தும், சௌதாமணியும் முதல் நாள் இரவே சென்று தாங்கள் செய்ய வேண்டிய கடமைகளை செய்தார்கள். வந்த உறவினர்கள் முன்னால் சம்பந்திகள் முன்னால் தங்கள் மனவருத்தத்தை காட்டிக் கொள்ளவில்லை.

மேலும் ஒருநாள் தங்கியிருந்து வீட்டை சரி பண்ண உதவி செய்து வந்தாள் சௌதாமணி. சதீஸ் ஒரு நண்பனிடம் "எனக்கு இந்த Plat – பிடிக்கலை., இண்டிபெண்டட் ஹவுஸ் வாங்கனும்னுதான் ஆசை.. பார்க்கலாம்... கொஞ்சநாளிலே வாங்கிவிடுவேன். இது கொஞ்ச நாளைக்குத்தான். ." என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

கிருஷ்ணகாந்த் காதில் இந்த சொற்கள் விழுந்தன. "வீட்டிற்குா பஞ்சம் உனக்கு? நான் இருக்கும் வீட்டையே இடித்து உன் இஷ்டத்திற்கு கட்டிக் கொள்ளலாமே நீ – நாங்க இரண்டு பேரும் தங்க ஒரு அறை ஒதுக்கிக் கொடுத்தால் போதாதா? - இல்லை வேறு இடத்தில் வீடு வாங்க பணம் கேட்டால் தந்து இருக்க மாட்டேனா?" என்று நினைத்துக் கொண்டான்.

அவன் கண்களில் தாரை தாரையாக நீர்.

# 31. மனமே நீயே ஒரு நோயா?

வருடம் 2011

உடல் மெலிந்து போக, உள்ளம் நொந்து போக நீண்ட நாட்கள் தேவை இல்லை. சில மாதங்களே போதும்.

சௌதாமணி– வேகமாக இளைக்க ஆரம்பித்தாள். ரத்தத்தில் சா்க்கரை அதிகரிக்க ஆரம்பித்துவிட்டது. ரத்தக் கொதிப்பும் சோ்ந்து கொண்டது. எப்போதும் கொஞ்சம் பதட்ட உணா்வு,கவலை.

கிருஷ்ணகாந்த் ஆளைப் பாா்த்து பாா்த்து செய்வதறியாமல் திகைத்தான். எப்போது பாா்த்தாலும் மருத்துவமனைக்கு போவதே பழக்கமாகிவிட்டது.

சத்தீஸிடம் அடிக்கடி கிருஷ்ணகாந்த் தொலைபேசியில் தொடா்பு கொண்டான். நேரிலும் போய் சௌதாமணியின் உடல்நிலை பற்றி பேசினான்.

சத்தீஸ் சில சமயம் அா்ச்சனாவும் அவனும் வந்து பாா்த்தாா்கள்.

“இப்போ என்ன ஆயிடுச்சு. ஏன் வீணா மனசை போட்டு குழப்பிக்கிறே? எல்லாம் நீயாக பண்ணிக்கொள்வதுதான்-” என்பான் சத்தீஸ்.

நாட்கள் இப்படியே போய்க் கொண்டிருந்தன.

‘உடம்புக்கு முடியலை என்று போன் செய்து ஒரு முன்னிரவு நேரத்தில் சத்தீஸையும் அா்ச்சனாவையும் அழைத்தாள் சௌதாமணி.

“சத்தீஸ் எங்க அப்பா எனக்கு என்ன செஞ்சாரோ அதையே நான் உனக்கு செய்யறேன். எங்களுக்கும் வயசாயிட்டே வருது…நாங்க தளா்ந்துட்டே வா்றோம்.,, நீ ஒரே மகன். .. பாகப்பிரிவினை செஞ்சுடறோம். எங்களுக்கன்னு கொஞ்சம் எடுத்து வச்சட்டு மிச்சத்தையெல்லாம் சட்டப்படி உனக்கே எழுதி வச்சிடறோம். எங் க அப்பா சொத்தையும் எழுதி வச்சிடறேன். சந்தோசமா இருங்க.. வந்துட்டு போயிட்டு இருங்க அது போதும்.!” என்றாள்.

சத்தீஸ் -அமைதியாக “ஒன்னும் வேண்டாம் உங்க சொத்தை நீங்களே வச்சுக்கங்க… உங்க காலத்துக்கு அப்புறம் ஏதாச்சும் தான தா்மத்திற்கு எழுதி வச்சுடுங்க. .. எங்களுக்கு வேண்டாம்” என்றான்.

“ஏண்டா அப்படி சொல்றே நாங்க உனக்கு என்ன கெடுதல் செஞ்சுட்டோம்? சொல்லு என்றாள் சௌதாமணி. உரக்க பேசினாள். அவள்.

“அதெல்லாம் ஒன்னும் இல்லே . எனக்கு வேண்டாம், அவ்வளவுதான். இனி நீ பணத்தைப் பற்றி பேசினால் இங்கே வருவதையே நிறுத்தி விடுவேன். அர்ச்சனா, ரித்தீஸ் யாரையும் அனுப்ப மாட்டேன். எனக்கு அப்பாவோட பணம், உன்னோட பணம் எதுவுமே வேண்டாம். அத்தனைதான்” என்றான்.

சௌதாமணிக்கு கோபம் வந்தது. “இப்பவே வெளியே போடா - இனி வரவே வராதே-”என்று கத்தினாள்.

சத்தீஸ் உடனே புறப்படவில்லை.சத்தம் போட்டு பேசிவிடவில்லை. ஒரு மணி நேரம் ஹாலில் அமைதியாக இருந்தான். பிறகு அர்ச்சனாவையும், ரித்திஸையும்அழைத்துக் கொண்டு புறப்பட்டுவிட்டான் சத்தீஸ்.

இத்தனையும் பார்த்துக் கொண்டிருந்த கிருஷ்ணகாந்த் இடிந்து போய் உட்கார்ந்து விட்டான். ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.. அன்று முழுவதும் சூனியத்தில் கண்கள்கு த்தியவாறு அமர்ந்திருந்தாள் சௌதாமணி. கிருஷ்ணகாந்த் - படுக்கையில் படுக்காமல் சோபாவில் இரவைக் கழித்தான்.

# 32.பித்தம் தெளிய மருந்து.

வருடம் 2011

வீடே பிடிக்கவில்லை கிருஷ்ணகாந்திற்கும், சௌதாமணிக்கும், எங்கேயாவது வெளியே போய்விட்டு வரலாம் என்று திட்டமிட்டார்கள்.

உறவுகளை நாடியது சௌதாமணியின் மனம். சிறுநகரத்திற்கு போய் கொஞ்சநாள் தங்கிவரலாம் என்று திட்டமிட்டாள் அவள்.

அவள் அம்மா, அப்பா, அண்ணன், அண்ணி, வேர்கள் குழந்தைகள் அம்மா! எத்தனை கலகலப்பான குடும்பம் அது என மனம் திட்டமிட்டது.

கிருஷ்ணகாந்தின் உறவினர்கள் கொஞ்சம் பேர்தான். எல்லாம் தூரத்து சொந்தமாகவும் இருந்தது. தூர தேசத்தில் குடியிருப்பவர்களாக இருந்தார்கள். கிருஷ்ணகாந்த் சௌதாமணியின் திட்டத்திற்கு ஒப்புக்கொண்டான்.

சிறுநகரம் போய் 15 நாட்கள் இருந்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டு விட்டார்கள்.

சிறுநகரில் -சௌதாமணியின் வீட்டில் - பேரனின் போக்கு குறித்து கேள்விப்பட்ட சௌதாமணியின் தந்தை மயூரநாதன் தாய் முதலானோர் வருத்தப்பட்டார்கள். "ஏதோ பிடிவாதம் பிடிக்கிறான். மயூரநாதன் ;– கொஞ்ச நாளில் சரியாகிவிடும் என்றார்-! என்றார் அவர்முகத்திலும் சோகம்...

நீ இருக்கிற இந்த வீடு – எனக்கு வேண்டாம் - யாருக்காச்சும் மாத்தி எழுதி வச்சுடு-" என்றாள் சௌதாமணி தந்தையிடம். – அவருக்குப்பின் அந்த வீடு சௌதாமணிக்கு என உயில் பதிவாகியிருந்தது.

நீ சும்மா இரு... என்றார்.மயூரநாதன். கிருஷ்ணகாந்தும் தன் மன வேதனைகளை உறவினர்களிடம் பகிர்ந்து கொண்டான். " எனக்கு ஒன்றும் புரியவில்லை-" என்று சொன்னான் அவன்

ஒரு நாள் கிருஷ்ணகாந்த் அன்புநம்பியிடம் தொலைபேசி மூலம் தகவல்சொல்லிவிட்டு அவர் வீட்டிற்கு போனார்..

உலக அரசியல், நாட்டு அரசியல் எல்லாம் பேசப்பட்டன. மெல்ல கிருஷ்ணகாந்தும் தன் மன வேதனைகளை வெளிப்படுத்தினான்.

தன் மகன் சத்தீஸ் ஏன் இப்படி நடந்து கொள்கிறான் என்று புரியவில்லை என்று சொன்னான் கிருஷ்ணகாந்த்.

பின் “காலத்துக்கு காலம் மாற்றம் என்பது வந்துதான் தீரும்” அதற்கு குடும்பம் என்ற அமைப்பு மட்டும் விதிவிலக்கு அல்ல. ஒரு காலத்தில் பெரிய குடும்பம் ... 30 பேர், 40பேருன்னு, அப்புறம் அம்மா,அப்பா,குழந்தைகள், பேரன்,பேத்தின்னு, அப்போ ரெண்டே பேர்., ஒரு குழந்தை இதுதான் குடும்பம். இன்னும் கொஞ்ச நாளிலே ஒவ்வொரு மனுசனும் தனித் தனிக் குடும்பமா மாறிப் போயிடுவான் போல இருக்கு-! என்றார். அவர் முகத்தில் வேதனை இழையோடியது. பின் என்ன பண்ண போறீங்க விட்டுப் பிடிங்க.. மேலே மேலே தேடிப் போகாதீங்க .. அவனே வருவான்.. நீங்க ரெண்டு பேரும் நேரா சென்னைக்கு போக வேண்டாம். வடநாட்டு யாத்திரை போங்க.. டெல்லியிலே கண்ணன் இருக்கிறான். அங்கே போய் கொஞ்ச நா இருந்துட்டு வாங்க. உங்க பிரிவு அவங்களை வாட்டனும். நீங்க மட்டும் வாடினா பத்தாது-!” என்றார் அன்புநம்பி.

கிருஷ்ணகாந்திற்கு அவர் சொன்னது சரி என்று பட்டது. வீட்டிற்கு சென்று சௌதாமணியிடம் சொன்ன பின் டெல்லி செல்ல ஏற்பாடு செய்தான் கிருஷ்ணகாந்த்.

# 33. இப்படியும் செய்து பார்க்கலாம்.

வருடம் 2011

டெல்லியில் கண்ணன் வீடு. கண்ணன் மனைவியையும், மகன், மகளையும் பார்த்து நீண்ட நாட்கள் ஆகியிருந்தன. அன்பொழுக வரவேற்றான் கண்ணன். கண்ணன் மனைவி மலர்க்கொடி ,கிருஷ்ணகாந்தையும், சௌதாமணியையும் நன்கு உபசரித்தாள்.

இரண்டு மூன்று நாட்கள் நால்வரும் டெல்லியை சுற்றிப் பார்த்தார்கள். கண்ணனுக்கு அதற்கு மேல விடுப்பு கிடைக்கவில்லை. எனவே ஆக்ராவிற்கு மலர்க்கொடி ,கிருஷ்ணகாந்த், சௌதாமணி மட்டுமே சென்று விட்டு வந்தார்கள்.

ஊரெல்லாம் சுற்றி பார்த்த பிறகு ஒரு நாள் முன்னிரவு நேரம் நால்வரும் கண்ணன் வீட்டில் அமர்ந்து பேச ஆரம்பித்தார்கள். கண்ணனின் மகன்,மகள் இருவருக்கும் திருமணம் மடிந்து இருந்தது. மகள் டெல்லியிலேயே வேறு ஒரு பகுதியில் வசித்து வந்தாள். மகன் பாட்னாவின் பக்கம் இருந்தான் .

கிருஷ்ணகாந்த் பேச்சை ஆரம்பித்தான். “நீங்க ரெண்டு பேரும் மட்டும்தான் இருக்கீங்க .. கஷ்டமாக இல்லியா?

கண்ணன் சிரித்துக் கொண்டே “பழகிப் போயிடுச்சு” என்றான். அவன் முகத்தில் எவ்வித வருத்தமும் இல்லை.

எனக்கு ரெண்டு பேர் மட்டும் தனியா இருக்கிறது ரொம்ப கஷ்டமா இருக்கு.. அது கூட சமாளிச்சிடலாம் . ஆனா தன் மகன் சத்தீஸின் போக்குகள். கோபதாபங்கள் எல்லாவற்றையும் விளக்கி சொன்னான்.

கேட்டுக் கொண்டிருந்த மலர்க்கொடியின் முகம் வாடிவிட்டது. இந்த காலத்தில் பிள்ளைங்க போக்கு சரி, விடுங்க, சரியாகிவிடும் என்று சொன்னாள்.

கண்ணன் இடைமறித்தான். நான் இப்படி நினைக்கவில்லை கிருஷ்ணகாந்த்.. சத்தீஸ்

மனதிலும் ஏதோ ப்ராபளம் இருக்குன்னு நெனைக்கிறேன். சின்ன வயசிலேயிருந்தே உங்க மனசிலே ஏதோ பிரச்னைகள் இருக்கு. .. நீங்கநாலுபோரும் ஏதாவது ஒரு டாக்டரைப் பார்த்து கவுன்சிலிங் எடுத்துக்கோங்க . சரியாகப் போயிடும் என்றான்.

கிருஷ்ணகாந்த் அதுவும் “நல்ல யோசனைதான்.. அதுக்கும் அவர்கள் வரணுமே!” என்றான்.

ஓரிரண்டு நாட்கள் கழித்து கிருஷ்ணகாந்த், செளதாமணி டெல்லியிலிருந்து திரும்பினார்கள்.

விமானத்தின் மூலம் வந்த அவர்கள் நேராக பெங்களூரு வந்தார்கள்..

பெங்களூரில் கோபாலன் வீட்டிறகு போய் தங்கினார்கள். இஙகே சங்கீதா அவர்களை வரவேற்று உபசரித்தாள்.

பலமுறை சுற்றி சுற்றி பார்த்த பெங்களூரு.. எனவே அதிகம் வெளியே போகவில்லை அவர்கள்.

ஒரு நாள் கிருஷ்ணகாந்தும், கோபாலனும் நடைபயணம் சென்றார்கள். கிருஷ்ணகாந்த் தன் மகனின் கதையை, மனவேதனையை எடுத்துச் சொன்னான். கோபாலன் எனக்கும் உன்னை போல ஒரு மகன்தான். ஆனால் எனக்கு இந்த பிரச்னைகள் வரலை. ஏன்னா நான் இருப்பது பெங்களூரிலே . அவன் இருப்பது மும்பையிலே. நேச்சுரலா தனிக்குடித்தனம்… என்றான்.

அடிக்கடி வர்றான் இல்லியா என்று கேட்டான் கிருஷ்ணகாந்த்.. தினம் அரை மணி நேரம் போன்லே பேசறான். மெயில் இப்படி எத்தனையோ காண்டாக்ட்.. என்றான். பின் -சரி நீ கவலைப்படாதே எல்லாம் சரியாகிவிடும்… கொஞ்ச நாளிலே அவனே உன்னை தேடிட்டு வருவான் பாரு.

எந்த நம்பிக்கையும் பிறக்காதவனாய், கனத்த இதயத்துடன் கிருஷ்ணகாந்த் இங்கிருந்து பறப்பட்டான்.

அங்கிருந்து நேராக ஹைதராபாத் சென்றார்கள் இருவரும்.

ஹைதராபாத்தில் துரையின் வீடு. இங்கு விமலா இருவரையும் வரவேற்றாள். சலித்துப் போயிருந்தான் கிருஷ்ணகாந்த். வெளியே எங்கேயும் போகவில்லை.

ஊருக்கு வந்த முதல் நாளே துரையிடம் தன் பிரச்னைகளை எடுத்து சொன்னான் கிருஷ்ணகாந்த். அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த விமலா- "யாராவது மத்தியஸ்தம் செய்து வைத்தால் சரியாய் போய்விடும்" என்றாள். பின் துரையைப் பார்த்து "ஏங்க நீங்க சத்தீஸுக்கு நீங்க போனை போடுங்க. வேணுமின்னா நாமளும் இவங்க கூட சென்னைக்கு போவோம். பேசி தீர்த்து வைப்போம்.

துரை உடனே சத்தீஸுக்கு போன் செய்தான். அவன் சொன்னதையெல்லாம் எதிர்முனையில் கேட்டுக் கொண்டிருந்த சத்தீஸ் அங்கிள் பெரிய பிரச்னை ஒன்றும் இல்லை. இதில் ரிலேட்டிவ்ஸ், பிரண்ட்ஸ்

எல்லாம் தலையிடாம இருந்தா நல்லா யிருக்கும். அப்பா ஏன் எல்லா்கிட்டேயும் எங்களைப் பத்தி இப்படி சொல்லியிருக்கார்னு தெரியலை.-! என்றான்.

துரையின் முகம் வாடிவிட்டது. விமலா நம்பிக்கை இழக்கவில்லை. ஒரு வாரம், பத்து நா கழிச்சு நேரா போவோம் பேசுவோம், எல்லாரையும் ஒன்னு சேர்த்து வைப்போம்.எப்படி போய்ட்டாங்க சௌதாமணி-'' என்றாள்.

அந்த நம்பிக்கையும் துளிா் விடாதவனாய் கிருஷ்ணகாந்த் ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டான்.

# 34. தேடுகின்ற அமைதி எங்கே?

வருடம் -2011

2011வது வருடம் முடிகின்ற தருணம் வந்துவிட்டது. நவம்பர் மாதம் குளிர் துவங்க ஆரம்பித்து விட்டது. சென்னையில் அதே வீட்டில் கருஷ்ணகாந்தும், சௌதாமணிக்கும் இயந்திர மயமான வாழ்க்கை.

தந்தையும் தாயும் ஒரு மாதம் போல் வெளியூர் போய் சுற்றி விட்டு வந்த செய்தி தெரிந்தும் சத்தீஸ் -அர்ச்சனா ரெண்டு பேரும் வந்து பார்க்கவில்லை. போன் செய்து செய்து சௌதாமணி சலித்துப் போனாள். சத்தீஸ் இதோ வருகிறேன், சாயந்திரம் வருகிறேன் என்பான், - ஆனால் வரமாட்டான். அடுத்த நாள் போன் ஏதோ ஒரு பதில்.அல்லது ஸ்விட்ச் ஆ.ஃப். சௌதாமணியின் ஏமாற்றங்களுக்கு அளவேயில்லை. மாதம் ஒன்று உருண்டது.

இதுவே அவளுக்கு மீண்டும் நோயாக மாறியது. கவலைதான் அதிகரித்தன. உயர் இரத்த அழுத்தம், ஓரிரு நாட்கள் மருத்துவ மனையில் சேர்த்து சிகிச்சை கொடுத்தான் கிருஷ்ணகாந்த்.

சத்தீஸுக்கு தகவல் கொடுத்தான் கிருஷ்ணகாநத். மமுத்துவ மனைக்கு சத்தீஸ் நேராக வந்தான். ஒரு பதினைந்து நிமிடம் இருந்தான். பிறகு புறப்பட்டு விட்டான். அர்ச்சனா, ரித்தீஸ் யாருமே வரவில்லை.

“இதுக்கு இவன் வராமலே இருந்திருக்கலாம்-” என்றாள் சௌதாமணி.

“அதெ விட்டுத்தள்ளு.. நா இருக்கேன் உனக்கு.. எனக்கு நீ இருக்கே.. அது போதும், வெட்டியிலே கவலைப்பட்டு உடம்பை கெடுத்துக்காதே-!” என்றான். குரலில் அன்பும் கண்டிப்பும் இருந்தன..

மருத்துவ மனையில் இருந்து டிஸ்சார்ஜ் ஆகி விட்டாள் சௌதாமணி. மேலும் ஒரு மாதம் ஓடிவிட்டது. நல்ல ஓய்வெடுத்துக் கொண்டாள்.

மீண்டும் ஒரு நாள் ஆரம்பித்தாள். “ஒரு பத்து நாள் போல எங்காச்சும் வெளியூர் போயிட்டு வரலாம்” என்றாள் சௌதாமணி. கிருஷ்ணகாந்த் சரி என்றான் அவன் மனதில் சத்தியபெருமாளும், அறிவுமதியும் நிழலாடினர்.

சேலத்தில் சத்தியபெருமாளின் வீடு வசதியாக இருந்தது. இப்போது சேலத்தில் அவர் நடுத்தரமான நல்ல வியாபாரம் உள்ள துணிக்கடையின் உரிமையாளர்.பெரிய தையல் கடையும் கூட . அவர் எந்த வேலையும் செய்வது இல்லை. மேற்பார்வை மட்டும் . எல்லாவற்றிற்கும் ஆட்கள்...

தையல் மிஷினில் உட்கார்ந்து பெடல் அழுத்தினால்தான் சோறு .. என்று சொன்ன சக்திபெருமாள் எங்கே? மாற்றம் -நல்ல முன்னேற்றம் என நினைத்துக் கொண்டான் கிருஷ்ணகாந்த். சக்திபெருமாளின் வீட்டு மாடியில் , பெரிய ஹாலில் அவன் மனைவி மரகதம், சௌதாமணி, கிரஷ்ணகாநத். ஆகியோர் அமா்ந்து இருந்தனா். கிருஷ்யகாந்த் சக்திபெருமாளிடம் தன் வேதனைகளை எடுத்துச் சொன்னான். ''ஏதாவது வழி பிறக்காதா?'' என்பதே அவன் ஏக்கமாகஇருந்தது.

அவன் வேதனையை புரிந்து கொண்ட சக்திபெருமாள் - ''இந்த காலத்திலே வாழ்க்கையே சினிமா மாதிரி ஆயிடுச்சு. எத்தனை சிவாஜிகணேசனுடைய படங்கள் பாசத்தை சொல்லியிருக்கிறன. அப்பா மகன் மனப்போராட்டம் எத்தனை படத்திலே, தங்கப்பதக்கம், கௌரவம்,வியட்நாம்வீடு, படிக்காத மேதை எத்தனை எத்தனை படம்….. கொஞ்சம் மிகைதான்… ஆனா அதுலே உண்மை இருந்தது.'' என்றார்.

கிருஷ்ணகாந்த் மௌனமாக தலையை குனிந்தான். ''இப்போ.. நான் என்ன செய்யறது – அதை சொல்லுங்க'' என்றான்.

சக்திபெருமாள் ''எனக்கு ஒரு வழியும் தெரியலே.. நீங்க பேசாமே அறிவுமதியை போய்ப் பாருங்க.. இப்போ அவர் அருட்வாக்கெல்லாம் சொல்ற மாதிரி கேள்வி .. எனக்கு நம்பிக்கை இருக்கு, இல்லைங்கறது வேற விஷயம்.. ஆனா அவர் நிறைய படிச்சவர். .. உண்மையான துறவி.. உங்களுக்கு ஒரு வழிகாட்டுவார் -போங்க-!''

மரகதமும் ''அப்படியே செய்யுங்க''இந்த காலத்திலே என்ன புள்ளைங்க..?என்றாள்.

## 35. தானாடவில்லையம்மா? சதையாடுது..

வருடம் 2011

அறிவுநம்பிய்ன வீட்டை கண்டுபிடிப்பது சற்ற சிரமமான விஷயம். எனவே தான் வருவது குறித்து அறிவுமதிக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்து இருந்தான். அவர் வீட்டிற்கு மிகச் சமீபமாக இருந்த போஸ்ட் ஆபீஸ் பஞ்ஞுடாண்டிற்கு,அறிவுமதி காத்துக் கொண்டிருந்தார்.

பஸ் போஸ்ட் ஆபீஸ் பஸ் ஸ்டாண்டில் வந்து நின்றது. கிருஷ்ணகாந்தும், சௌதாமணியும் பஸ்விட்டு இறங்கினார்கள். அறிவுமதி அவர்களை வீட்டிற்கு அழைத்துச் சென்றார். 1 கி. மீடட்ருக்கு மேல் இட்டேரியிலும், வரப்பிலும் நடந்து செல்ல வேண்டும். -அறிவுமதியின் வீட்டிற்கு சாலையிலே போக வேண்டும் என்றால் இன்னும் தூரம்.

அறிவுமதியின் வீடு தோட்டத்திற்கு நடுவிலே இருந்தது. புஞ்சை பயிர்கள்தாம். .. ஆனால் கிணற்றுப்பாசனம்.. பசுமை நிறைந்து இருந்தது.

வீடு பசுஞ்சாணத்தில் மெழுகப்பட்டிருந்தது. ஓட்டு வீடுதான் என்றாலும் மேலே ஓட்டுக்கு கீழே பலகைகள் பொருத்தப்பட்டிருந்தன. வீடு குளிர்ச்சியாக இருந்தது. நல்ல வெயில் நேரம் அது... அந்த வீட்டிற்குள் இருப்பதே கிருஷ்ணகாந்திற்கும், சௌதாமணிக்கும் சுகமாக இருந்தது.

சிறு நகரில் நடந்த பழைய கால சம்பவங்களை எல்லாம் அறிவுமதி நினைவு கூர்ந்து பார்த்தார். கிருஷ்ணகாந்த் மட்டும் படாமல்பதில் சொல்லிக் கொண்டிருந்தான்.

பிறகு - கிருஷ்ணகாந்த்- "எங்களுக்கு ஒரு பிரச்சனை" ஏதாவது வழி சொல்லுங்கள்-" என்று பேச்சை ஆரம்பித்தான்.

அறிவுமதியின் கண்க்ள் கூர்மையாக இருந்தன. முகத்தில் தாடி இல்லை. ஒரு சிறு கீற்று போல் திருநீறு ஒளிர்ந்தது. .. சிரித்தார் இலேசாக அறிவுமதி. "உங்களுக்கு தான் ஒரு பிரச்னையும் வராது என் சொல்லியிருக்கிறேனே!"– என்றார்.

கிருஷ்ணகாந்த் -" பிரச்னைகளுக்கு என்ன பஞ்சம்?" என்று கொட்டி தீர்த்தான். "எனக்கு வேற ஒன்னும் வேண்டாம். பிளவுபட்ட குடும்பம் ஒண்ணாகனும். அவன் பாசத்தோட எங்ககிட்டே ஒட்டனும். யார் சொல்லியும் அவன் கேட்கலை -!

என்ன செய்யணும் - அதைச் சொல்லுங்க!" என்றான்.

"இன்னொரு தடைவ பிரச்னையை சுருக்கமா சொல்லுங்க.?'' என்றான் அறிவுமதி இடையில் ஒன்றுமே பேசவில்லை.'' கிருஷ்ணகாந்த் - சௌதாமணி சொல்வதை கேட்டுக் கொண்டிருந்தான்..இடையில் கேள்விகள் எதுவும் கேட்கவில்லை.

பின் இலேசாக சிரித்தார். –"விளையாட்டுப்பிள்ளை'' என்றார். கிருஷ்ணகாந்திற்கு ஒன்றுமே புரியவில்லை. –"என்ன?'' என்று கேட்டார். சத்தீஸை சொல்கிறேன். அவன் விளையாட்டுப்பிள்ளை-!'' நீங்கள் விளையாட்டு வீரர்'' விளையாட்டில் எத்தனை வெற்றி –தோல்விகளை பார்த்திருப்பீர்கள் நீங்கள்! அதைப் போலவே இதையும் எடுத்துக் கொள்ளுங்கள்! வெற்றி என்ன- தோல்வி என்ன-என்றார். சௌதாமணியின் பக்கம் திரும்பி –"அம்மா? புத்திர சோகம் மிகவும் கொடியது. அம்மா! இராமயணத்தில் தசரத மகாராஜாவை கொன்றது புத்திர சோகம்தானே! அதை விட்டுவிடுங்கள்..'' என்றார். கிருஷ்ணகாந்தும், சௌதாமணியும் அமைதியாகவே இருந்தார்கள். அறிவுமதி தொடர்ந்தார் - "வேற ஒண்ணுமில்லே'' உங்க மகன் சத்தீஸ் மனசிலே உங்க கூட போட்டி ஆழமா பதிந்திருக்கு கூட ரோஷமும் சேர்ந்து இருக்கு... ரோஷம்தான் பணத்தை துச்சமா மதிக்கும்... ரொம்ப ஆழமா யோசித்தால் எல்லாம் ஒரு வகை ஆணவம்தான.

"இப்போ – நாங்க என்ன செய்யறது. நீங்க துரை –எல்லாம் வந்து மத்தியஸ்தம் பேசறீங்களா?'' என்றான் கிருஷ்ணகாந்த்.

"அதெல்லாம் வேண்டாம்-! உங்க மகன்தானே . அவன் உங்க வீட்டுக்கு வரலை. நீங்க போகலாம் இல்லியா? ஒரு நல்ல சந்தர்ப்பம் பார்த்து – அவன் வீட்டுக்கு போங்க.. உங்க அன்பை காட்டுங்க.. சண்டை போட வேண்டாம்.''போட்டி ரோஷம் எல்லாம் வேண்டாமனு மெதுவா சொல்லுங்க மாறவேன்னா பார்க்கலாம்,, டிப்படியா போங்க. உங்களுக்கு எந்த குறையும் வராது.-!'' என்றான்.

"திரும்ப திரும்ப இதையே சொல்றீங்களே-எதனாலே சொல்றீங்க!'' என்றான்., கிருஷ்ணகாந்த்.அதெல்லாம் உங்களுக்கு புரியாது – அதெல்லாம் முகத்தைப் பார்த்து சொல்றது. ஒத்தரு முகம் பேசும் ஆயிரம் கதை.. அது ஒர சோசியம் என்றார் அறிவுமதி.

கிருஷ்யகாந்திற்கு இவ்விஷயங்கள் புரிந்தது போல் இருந்தது.. சில வஷயங்கள் புரியாதது போல இருந்தது. சௌதாமணியன் நிலையும் அதுவாகவே இருந்தது.

விடை பெற்றுக் கொண்டு இரவரும் கிறம்பினார்கள். அவர்கள் மதிய உணவு அருந்தாமல் செல்ல - அறிவுமதி அனுமதிக்கவில்லை.

# 36. ஒரு துளி அமுதம்

கிருஷ்ணகாந்த்- சௌதாமணி சென்னை திரும்பி விட்டார்கள். சௌதாமணி என்னங்க நாளைக்கே சத்தீஸ் வீட்டிற்கு போகலாமா என்றாள். கிருஷ்ணகாந்த் ''கொஞ்சம் -பொறு –சந்தர்ப்பம் வரட்டும். இந்தப் பிரச்னையை நான் தீர்த்து விடுகிறேன்-என்றான். அர்ச்சனாவிற்க உடம்பு சரியில்லை. நல்ல காய்ச்சல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு இருந்தாள் . மோகன்ராவ் மூலம் செய்தியை அறிந்த சௌதாமணி –''ஆஸ்பத்திரிக்கு போகலாம் -என்று துடித்தாள். கிருஷ்ணகாந்த் அமைதிப்படுத்தினான் - ''காய்ச்சல் சரியாகி வீட்டிற்கு வரட்டும், வீட்டிற்கே போகலாம்'' என்றான்.

இரண்டு மூன்று நாட்களில் வீட்டிற்கு வந்தவுடன், கிருஷ்ணகாந்த்,சௌதாமணிசத்தீஸின் வீட்டிற்குப் போனார்கள். சௌதாமணி உடல் நலம் மட்டும் விசாரித்தாள். அதிகம் பேசவில்லை. மாலை நேரம் சத்தீஸ் வீட்டில் இருந்தான். கிருஷ்ணகாந்த் பொதுவாக உடல்நலம் விசாரித்துவிட்டு, ஒரு மணி நேரம் கழித்து வீடு திரும்பினார்.அதிகம் பேசவில்லை. சத்தீஸும் பட்டும் படாமலும் பேசினான். அர்ச்சனாவிற்க ஒன்றும் புரியவில்லை.'' அவள் கண்கள் வியப்பில் விரிந்தன.

மேலும் ஒரு பதினைந்து நாட்கள் போனது. கிருஷ்ணகாந்த் ''வா சத்தீஸ் வீட்டிற்கு போகலாம்.. ரெண்டு நாள் தங்கிவிட்டு வரலாம்'' என்றான் ''என்னங்க என்ன செய்யறது. உங்களை அவமானப்படுத்தினா எனக்கு தாங்காது...'' என்றாள் .

''ஒன்றும் ஆகாது.. நீ வா நான் பார்த்துக் கொள்கிறேன்'' என்றான். அன்று இரவு 8 மணி இருக்கும்.அர்ச்சனா, ரித்தீஸ் மட்டும் வீட்டில் இருந்தார்கள். சத்தீஸ் இல்லை அவருக்கு வியப்பு மேலிட்டது. ''அங்கே ஒரே போர் . இரண்டு நாள் இருந்துவிட்டு போகலாம் என்று வந்திருக்கிறோம் '' என்றார் கிருஷ்ணகாந்த். ''சரி'' என்றாள் அர்ச்சனா. அறைக்கு சென்று அவசர அவசரமாக அவர்கள் வருகையைப்பற்றி சத்தீஸுக்க போன் செய்தாள்.

அரை மணி நேரம் கழித்து வந்தான் சத்தீஸ். ''அம்மாவுக்கு ஏதாச்சும் ஒடம்பு சரியில்லையா?'' என்று கேட்டான். அதெல்லாம் ஒன்றுமில்லை. நல்லாத்தான் இருக்கோம். ரெண்டு நாள் இருந்துட்டு போறோம். மகன் வீடுதானே'' என்றார். என்ன அர்ச்சனா நாங்க இருக்கிறதுலே உனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லியே! என்றார்.

ஒன்றும் இல்லை என்று தலையசைத்தாள் அர்ச்சனா. பின் அவர்கள் இருவரும் தங்க ஒரு அறையை ஒதுக்கி கொடுத்தாள். இரவு உணவு வழக்கம் போல் இருந்தது.அடுத்த இரவு உணவு வேளை வரும் வரைபொதுவாகவே பேசினார். குடும்ப பிரச்னைகள் எதுவும் பேசவில்லை. சத்தீஸும் அன்று வீட்டிலேயே இருந்தான். அவனிடம் பொதுவாக பேசிக் கொண்ருந்தான் கிருஷ்ணகாந்த்.

உணவு வேளை வந்தது. சாப்பிட்டுக் கொண்டெ கிருஷ்ணகாந்த் ‘‘இதோ – பாரு சத்தீஸ் .. நான் ஒரு Ex-sports man –தெரியும் இல்லியா?- வாழ்க்கைங்கிறது ஒரு விளையாட்டுத்தான். விளையாட்டுன்னா என்ன, உன்னை விட நான் -பெரிய ஆள்-புத்திசாலின்னு நிருபிக்கறதுதான். அதுதான் விளையாட்டுஅதிலே அந்த எண்ணத்திலே தப்பே இல்லை. ஆனா கூட விளையாடறவன் மேலே அன்பு இருக்கனும்.. அவன் திறமையெல்லாம் மதிக்கணும். அவனை வேறே ஒருத்தனா நினைக்கக் கூடாது .. இல்லியா? என்றார்.

சத்தீஸும் அர்ச்சனாவும் ஒன்றுமே பேசவில்லை–‘‘பிறகு கிருஷ்ணகாந்த் ‘‘எந்த விளையாட்டு விளையாடினாலும் கடைசி வரைக்கும் ஆடறதுக்கு முயற்சி பண்ணனும். பாதியிலே விலகக்கூடாது’’ ஒரு ரன்னிங் ரேஷிலே ஓடினா , வெற்றியோ, தோல்வியோ எடுத்துகிட்ட ஓட்டத்தை கம்ப்ளீட் பண்ணிட்டுத்தான்வெளியே வரனும். always in the same.. Don’t exite என்றார்.

சௌதாமணி, ரோஷம் எதுன்னாலும் மனசுலே வெச்சுக்க கூடாது. அதை அதை அப்ப அப்ப விட்டுடனும்..! என்றாள்.

எதற்கும் சத்தீஸ் அர்ச்சனா இருவரும் பதில் பேசவில்லை…‘‘சரி நல்லா திங்க் பண்ணுங்க –புரிஞ்சுக்கோங்க!’’ என்றான் கிருஷ்ணகாந்த். மேலும் ஒரு நாள் அங்கேயே இருந்தான். ஆனால் எந்த உபதேசமும் கூறவில்லை. விடை பெற்றுக் கொண்டு சௌதாமணியுடன் வந்து விட்டான் கிருஷ்ணகாந்த்.

மேலும் 15 நாட்கள் போனது. சத்தீஸிடமிருந்தோ, அர்ச்சனாவிடமிருந்தோ போன் எதுவும் இல்லை. வா சத்தீஸ் வீட்டிற்கு போகலாம் என்றான் கிருஷ்ணகாந்த்.

‘‘என்னங்க ஒரு போன் கூட இல்லையே என்றான் சத்தீஸ்.’’பரவாயில்லே –வா போகலாம்’’ என்றான்.

அது மாலை நேரம் . மணி 8.30 . சத்தீஸ், அர்ச்சனா, ரித்தீஸ் மூவரும் ஹாலிலே அமர்ந்து இருந்தார்கள். தந்தையையும், தாயையும் பார்த்த உடன்

எழுந்து நின்றான் சத்தீஸ். அர்ச்சனாவும் எழுந்து நின்றாள்.''இப்பவும் ரெண்டுநாள் இருப்போம்-'' என்றான். சத்தீஸ்..சென்ற தடைவ போலவே இரண்டாவது நாள் மாலை வரை எதுவுமே குடும்ப விஷயமாக பேசவில்லை கிருஷ்ணகாந்த். மாலை வந்தது.,

சத்தீஸ், அர்ச்சனா, ரித்தீஸ் மூவரும் ஹாலிலே அமர்ந்து இருந்தார்கள். கிருஷ்ணகாந்த் தன் கைப்பையோடு வந்தார்.. பையிலிருந்த பணத்தை எடுத்தார்.''பாரு –சத்தீஸ் இதிலே ஒரு லட்சம் இருக்கு'' உனக்கும் ஆஸ்பத்திரி செலவு எல்லாம் இருக்கும். எடுத்துக்கோ செலவுக்கு வச்சுக்கோ., என்றான்.

சத்தீஸ், பணம் எல்லாம் வேண்டாம்.. எங்கிட்டேயே இருக்கு. பணம் எதுக்கு?என்றான். கிருஷ்ணகாந்த்.. உன்கிட்டே இல்லேன்னு நான் சொல்லலே As a father அப்பாங்கற முறையிலே என் கடமையை செய்யறேன்.. தட்டிப் பேசாதே –எடுத்துக்கோ !'' என்றார்.

சத்தீஸ் கொஞசம் தயங்கினான்... பணத்தை எடுத்தான் . ''சரி ஒரு லட்சம் வேண்டாம், பத்தாயிரம் மட்டும் எடுத்துக்கறேன்.'' என்று ஒரு பத்தாயிரத்தை மட்டும் எடுத்துக் கொண்டான்.

''சரி-!'' என்றார் கிருஷ்ணகாந்த். அவன் முகத்தில் இலசான புன்முறுவல்.. சௌதாமணிக்கும், அர்ச்சனாவுக்கும் புன்முறுவல்தான். .. எல்லோரும் அடக்கிக் கொண்டார்கள்.

-ஒன்றுமே பேசவில்லை கிருஷ்ணகாந்த்.. சௌதாமணியை அழைத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விட்டான்.

உனக்கு ஞாபகம் இருக்கா சௌதாமணி, ஒரு தடவை செஸ் விளையாடும் போது அவனே ஜெயித்துக் கொண்டிருந்தான் இல்லியா? நான் சும்மா விளையாட்டுக்கு இப்படி நீயே ஜெயிச்சுட்டு இருந்தீன்னாபெரியவன் ஆனா உனக்கு சொத்திலே பங்கு இல்லேன்னு சொன்னேன். அது அவன் மனசிலே ஆழமா பதிஞ்சுடுச்சுன்னு நெனைக்கிறேன்.

மேலும் பத்து நாட்கள்ஓடின. சௌதாமணியை பார்த்து கிருஷ்ணகாந்த் ரோஷக்காரன்டி உன் மகன் - சின்ன வயசிலே வீட்டிலே ஏதாவது சண்டை வந்தா எனக்கு ஒண்ணும் சாப்பாடு வேண்டாம் போன்னு -ரூம்லே போய் படுத்துப்பான் இல்லியா. அதே போலவே இன்னும் இருக்கிறான். அவன் மனசிலே இருக்கிறது ரோஷம்தான். வாங்க போகலாம்- உனக்கு என்னடா ரோஷம்னு கேக்கலாம் என்றாள்.

கிருஷ்ணகாந்த் அடப் போடீ! என்றான்''இன்னிக்கு சாயந்திரம் போன் வரும் நான் விளையாடறேன் பார்-'' என்றான்.

மாலை நேரம் . சத்தீஸ் இருக்கிறானா- என்பதை தொலைபேசி மூலம் தெரிந்து கொண்டு, இருக்கும் நேரம் பார்த்து கிருஷ்ணகாந்த், சௌதாமணியும் -வீட்டிற்கு சென்றார்கள். கிருஷ்ணகாந்த் ''ஒரு ரெண்டு மணி நேரம்தான் இருக்கப் போறேன். அவசரமான வேலை கொஞ்சம் இருக்கு.. அதுக்குள்ளே உங்ககிட்டே கொஞ்சம் முக்கியமான விஷயம் பேசனும், என்றான் கிருஷ்ணகாந்த்

எல்லோரும் அமைதி காத்தார்கள். –அர்ச்சனா உனக்குத்தான் சொல்றேன்.. அது ஆணோ பெண்ணோ தன் திறனை பெரிதாக காட்டிக்க ஆசைப்பட மாட்டார்கள். சில பேரு சந்தோசமா நிம்மதியாவே இருந்தா போதும்னு நெனைப்பாங்க. அதிலே ஒன்றும் தப்பில்லையே?

அர்ச்சனாவிற்கு கிருஷ்ணகாந்த், ஏன் ஏதோ பழைய நிகழ்ச்சியை மனத்தில் வைத்துக் கொண்டு பேசுகிறான் - என்று புரியவில்லை, அமைதி காத்தாள் அவள்.

கிருஷ்ணகாந்த் சத்தீஸை ப்ர்த்து- ''சத்தீஸ்.. இப்போ ரித்தீஸ்குமாருக்கு லீவுதானே, எங்களுக்கு பொழுது போகலை . ஒரு வாரம் என் வீட்டிற்கு கூட்டிட்டு போகிறேன். அங்க அவன் கொஞ்ச நா இருக்கட்டும். என் பேரன்தானே'' என்றான்.

அர்ச்சனாவுக்கும், கிருஷ்ணகாந்த்தின் எண்ணம் இப்போது நன்றாக புரிந்துவிட்டது… அவள் முகம் முழுக்க சிரிப்பு, ''கூட்டிட்டு போங்க மாமா-! என்று சொல்லிவிட்டான். சத்தீஸ் ஒன்றும் சொல்லவில்லையே என்றுான் கிருஷ்ணகாந்த் , ''உங்க இஷ்டம்''..''கூட்டிட்டு போங்க-'' என்றான் சத்தீஸ்.

ரித்தீஸ்குமாருக்கு எல்லாம் புரிந்துவிட்டது. ..அவன் ஓடிப்போய் தௌதாமணியை கட்டிக் கொண்டுவிட்டான். தௌதாமணிக்கு முகமெல்லாம் பூரிப்பு.. ஒரு பெருமூச்சு.

கார் வரைக்கும் வந்து வழி அனுப்பினார்கள், சத்தீஸும். கிருஷ்ணகாந்தும் சௌதாமணியும் ரித்தீஸை கூட்டிக் கொண்டு போய்விட்டார்கள்.

ஹாலில் வந்து சத்தீஸும், அர்ச்சனாவும் ஹாலில் வந்து சோபாவில் வந்து அமர்ந்து கொண்டார்கள். அர்ச்சனா பேச்சை ஆரம்பித்தாள். .. அப்படி

என்னங்க – உங்க மனசிலே ரோஷம்? அதுவும் உங்க அப்பா அம்மா பேரிலே?'' என்றாள்.

சத்தீஸ் பெருமூச்சு விட்டான் எனக்கே இப்பத்தான் மெல்ல புரியுது. சின்ன வயசிலே ஒரு தடைவ செஸ் விளையாடும் போது, நானே ஜெயிச்சுட்டு இருந்தேன். அது என் "நடத்தை" (Behaviour) சேஞ்ச் (மாத்திடுச்சு) பண்ணிடுச்சு. .. அப்பாவை அம்மாவை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன். " என்றான்.

"அர்ச்சனா" புரிகிறது, என்றாள். "அவரு ஏதோ விளையாட்டுக்குச சொல்லியிருப்பாரு.. உங்க மனசிலே ஆழமா பதிஞ்சுடுச்சு . உங்களையறியாமல் அப்பாவிடமிருந்து கொஞ்ச கொஞ்சமாக விலக ஆரம்பிச்சுட்டீங்க... இல்லியா?'' என்றாள்.

"அப்படித்தான் ஆயிடுச்சு.. இப்போ என்ன பண்ணலாம்'' என்றான். அர்ச்சனா கொஞ்சம் அமைதி காத்தாள்..."சரி போனதை மறந்துடுங்க. அப்பா – அம்மாவோட மனசு, இப்போ உங்களுக்கு புரிஞ்சுடுச்சு இல்லியா ... இனி நாம அவங்களை சந்தோஷமா பார்த்துக்கலாம்.

சத்தீஸ் " ம் சரி – என்றான். அவன் முகம் இறுக்கமாக இருந்தது.

அர்ச்சனா..."ம் மூட் அவுட் ஆகக் கூடாது... இது எல்லாம் சரியாகிவிடும். எப்பவும் போல சந்தோசமா நாம இருக்கனும்'' என்றாள்.

இருவரும் மௌனத்தில் ஆழ்ந்தனர்.

கிருஷ்ணகாந்தின் வீட்டில் டி.வியில் ஏதோ கிரிக்கெட் மாட்ச் நடந்து கொண்டிருந்தது. டெண்டுல்கர் மேலும் ஒரு உலக சாதனையை நிகழ்த்திக் கொண்டிருந்தார். தாத்தாவும் பேரனும் ரசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது கார் வந்து நின்றது. அர்ச்சனாவும், சத்தீஸும் - கிருஷ்ணகாந்திற்கும், சௌதாமணிக்கும். துணிமணிகள், பழங்கள் என நிறைய எடுத்துக் கொண்டு வீட்டிற்குள் வந்தார்கள்.